




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



SRL Jewellery

MJF.Lion.SRL. VENUGOPAL @ KANNAN

87, Main Road, Sankarankovil

Cell : 9150061745



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 267 | 21.03.2026 | SATURDAY | PANGUNI: 7 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 267 | 21.03.2026 | சனிக்கிழமை | பங்குனி : 7 | விலை : ரூ.5/–


## ரம்ஜான் பண்டிகை

# "முதல்வர் வாழ்த்து"




சென்னை: மார்ச்.21-

நடப்பாண்டுக்கான ரம்ஜான் பண்டிகை நாளை கொண்டாடப்படவுள்ளது. இதனையொட்டி, தமிழக முதல்வர் ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட பல்வேறு கட்சித் தலைவர்கள் தங்கள் வாழ்த்துகளை பகிர்ந்துள்ளனர்.

நிலாவை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய நாட்காட்டியின் 9வது மாதத்தில் உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்களால் ரம்ஜான் நோன்பு கடைப்பிடிக்கப்படுகிறது. இஸ்லாமியர்களின் ஐந்து முக்கிய கடமைகளில் ரம்ஜான் நோன்பு ஒன்றாகும். அதன்படி, 30 நாட்கள் நோன்பின் முடிவில், ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்படுவது வழக்கம்.

நடப்பாண்டிற்கான ரம்ஜான் பண்டிகை மார்ச் 21ம் தேதி (இன்று) கொண்டாடப்படும் என தமிழக அரசு தலைமை காஜி அறிவித்துள்ளார். இதனிடையே, ரம்ஜான் பண்டிகையையொட்டி, முதல்வர் ஸ்டாலின் மற்றும் தமிழகத்தின் பல்வேறு கட்சித் தலைவர்கள் தங்கள் வாழ்த்துக்களை பகிர்ந்துள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள ரம்ஜான் வாழ்த்துச் செய்தியில்: நோன்பை முடித்து, புத்தாடை அணிந்து, அன்பை அனைவரோடும் பகிர்ந்து கொள்ளும் இஸ்லாமாமிய உடன்பிறப்புகள் அனைவருக்கும் உங்களில் ஒருவனின் இனிய ரம்ஜான் நல்வாழ்த்துகள்.

வரலாற்றில் நாம் கண்ட பெரும் புரட்சியாளர்களில் ஒருவரும், சமத்துவத்தின் திருவிளக்குமான நபிகள் நாயகத்தின் நெறியில் வாழ்ந்து வரும் இஸ்லாமியச் சகோதரர்களுக்கு என்றும் அரணாக நமது திமுகவும், திமுக அரசும் திகழ்ந்து வருகின்றது. கல்வி, வேலை வாய்ப்புகள், பொருளாதாரம், அரசியல் பிரதிநிதித்துவம், மதச் சுதந்திரம் என அனைத்து நிலைகளிலும் சிறுபான்மைச் சகோதரர்களுக்கான சமூக நீதியை நிலைநாட்டி இருக்கிறது.

இஸ்லாமிய மக்களுக்கு எதிரான சட்டங்களை மத்திய பாஜக அரசு கொண்டுவரும் போதெல்லாம் மக்கள் மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் அவற்றை எதிர்த்துக் கடுமையாகப் போராடி வருவதுடன், சட்டமன்றத் தீர்மானங்கள் வாயிலாகவும் நமது நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தி வருகிறோம். மதச்சார்பின்மைக் கொள்கையில் சமரசமற்று நாம் செயல்படுவதால்தான், அனைத்துத் தரப்பு மக்களும் நம்மைத் தொடர்ந்து ஆதரித்து வருகிறார்கள்.

இந்தியாவில் பிற மாநிலங்களில் எல்லாம் வெறுப்பு விதைகள் தூவப்பட்டு, நாள்தோறும் வன்முறைகள் நிகழ்த்தப்பட்டு வரும் நிலையிலும் தமிழ்நாடு நல்லிணக்கத்தின் பூங்காவாகத் திகழ்கிறது. எல்லாருக்கும் எல்லாம் என்ற வழியில் நடைபோடும் நமது அரசு அனைவரது பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிசெய்துள்ளது.

கடந்த 5 ஆண்டு திமுக ஆட்சியில், பல சிறப்பு அறிவிப்புகளையும், சென்னையில் ஹஜ் இல்லம், தொன்மையான பள்ளிவாசல்கள் தர்காக்கள் புனரமைப்பு, இசுலாமிய மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகைகள் உள்ளிட்ட திட்டங்களையும் நிறைவேற்றி வந்திருக்கிறோம். இப்படி என்றும் உங்களில் இருந்து பிரிக்க முடியாத சொந்தமாக உறவாடும் அன்போடு, ஈகைப் பண்போடு ரம்ஜான் பண்டிகையைக் கொண்டாடும் இஸ்லாமியப் பெருமக்களுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று முதல்வர் கூறியுள்ளார்.



## என்.ஆர்.காங். 16, பாஜக 10, அதிமுக 2, லஜக 2 புதுச்சேரி என்டிஏ தொகுதிப் பங்கீடு விவரம்

புதுச்சேரி: மார்ச்.21-

புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி தொகுதிப் பங்கீடு நிறைவுற்றது. அதன்படி, என்.ஆர்.காங்கிரஸுக்கு 16, பாஜக 10, அதிமுக, லஜகவுக்கு தலா 2 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் கடந்த முறையை விட அதிமுக மிக குறைந்த தொகுதிகளில் போட்டியிடுகிறது என்பது கவனிக்கத்தக்கது.

புதுச்சேரியில் கடந்த தேர்தலில் என்.ஆர். காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்டதை போல் இம்முறையும் 16 தொகுதிகள் ஒதுக்கப்படுகிறது. அதே நேரத்தில் பாஜகவுக்கு கடந்த முறை 9 தொகுதிகளை விட கூடுதலாக ஒரு தொகுதி சேர்த்து 10 தொகுதிகள் ஒதுக்கியுள்ளனர். அதிமுகவுக்கு கடந்த முறை 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. தற்போது 2 தொகுதிகள் மட்டுமே ஒதுக்குகின்றனர். அதேபோல் புதிய கட்சியான லாட்டரி அதிபரின் லஜகவுக்கு 2 தொகுதிகள் ஒதுக்கப்படுகிறது.

இதுபற்றி என்டிஏ வட்டாரங்களில் விசாரித்தபோது, "கடந்த தேர்தலில் போட்டியிட்ட தொகுதிகளை உறுதிப்படுத்திய சூழலில் முத்தியால்பேட்டை, லாஸ்பேட்டை தொகுதிகளில் என்.ஆர். காங்கிரஸ் இம்முறை போட்டியிடுகிறது.

அதே நேரத்தில் மாஹே, ராஜ்பவன் தொகுதிகளை பாஜகவுக்கு விட்டு தந்துள்ளது. இதில் அமைச்சர் தொகுதியான ராஜ்பவனில் பாஜக மாநிலத் தலைவர் ராமலிங்கம் போட்டியிடவுள்ளார்.

என்.ஆர்காங்கிரஸில் நடப்பு அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் சிலருக்கு வாய்ப்பு மீண்டும் தரப்போவதில்லை என முடிவு எடுத்து படிப்படியாக ஒப்புதலை ரங்கசாமி வழங்கி வருகிறார். அதேபோல் பாஜகவிலும் முன்னாள் அமைச்சர் உள்ளிட்டோருக்கு வாய்ப்பு இல்லை.

லஜக கட்சியான காமராஜர் நகரில் கட்சித் தலைவர் ஜோஸ் சார்லஸும், நெல்லித்தோப்பில் பாஜக அமைச்சர் ஜான்குமார் மனைவியும் போட்டியிடுவார்கள். இது தொடர்பான முறையான அறிவிப்பு விரைவில் வெளியாகும்" என்றனர்.

## பிரீமியம் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.2 அதிகரிப்பு!

புதுடெல்லி: மார்ச்.21-

பிரீமியம் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தி ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதலை தொடங்கியதை அடுத்து, இரு தரப்புக்கும் இடையேயான போர் 21 வது நாளாக நீடித்து வருகிறது. ஈரானின் முக்கிய எண்ணெய் வயலை இஸ்ரேல் தாக்கியதால், கத்தாரின் மிகப் பெரிய எண்ணெய் வயலை ஈரான் தாக்கியது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கி உள்ளது. இதன் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது. தற்போதும் ஏற்ற இறக்கங்களுடன் கச்சா எண்ணெய் விற்பனையாகி வருகிறது.

இந்நிலையில், பிரீமியம் பெட்ரோலின் விலையை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தி ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் அறிவித்துள்ளது. அதேநேரத்தில், விலை உயர்வுக்கான காரணத்தை அது தெரிவிக்கவில்லை. எனினும், சாதாரண பெட்ரோலின் விலையில் மாற்றம் எதையும் அது செய்யவில்லை.

இந்தியாவில் கச்சா எண்ணெய்க்கு தட்டுப்பாடு இல்லை என எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. அதேநேரத்தில், அவற்றின் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

பிரீமியம் பெட்ரோல் என்றால் என்ன?

வாகனத்தின் என்ஜினின் செயல் திறன் சிறப்பாக இருப்பதற்காகவும், மேம்பட்ட மைலேஜுக்காகவும் பயன்படுத்தப்படுவது பிரீமியம் பெட்ரோல் எனப்படுகிறது.

குறிப்பாக, சொகுசு வாகனங்கள், ஸ்போர்ட்ஸ் வாகனங்கள், உயர் செயல்திறன் கொண்ட கார்கள் ஆகியவற்றில் இத்தகைய எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது. ஆக்டேன் எரிபொருள் அல்லது பவர் பெட்ரோல் என்றும் இது அழைக்கப்படுகிறது. ஹிந்துஸ்தான் பெட்ரோலியத்தின் இந்த விலை உயர்வு, வசதி படைத்த வாடிக்கையாளர்களையே பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "கச்சா எண்ணெய் விநியோகத்தில் எந்த இடையூறும் இல்லை. கூடுதல் சரக்குகள் ஏற்கெனவே வந்து கொண்டிருக்கின்றன. வரும் நாட்களில் இந்தியாவின் விநியோக நிலை மேலும் வலுப்படும். வதந்திகளை நம்பாதீர்கள். அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை நம்புங்கள்" என தெரிவித்திருந்தது.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதற்கு வழிவகுக்கும் முயற்சிகளில் முன்னணி ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானும் இணைய முன்வந்ததால், பேரலுக்கு 110 டாலராக உயர்ந்த கச்சா எண்ணெய் விலை 105 டாலராக குறைந்தது கவனிக்கத்தக்கது.

## தூங்கா நகரத்தில் தேர்தல் திருவிழா! 100% இலக்கை நோக்கி ஆட்சியரின் 'பிங்க்' படை பேரணி!

மதுரை, மார்ச்.21

"என் வாக்கு என் உரிமை!" என்ற முழக்கத்துடன், மதுரையை அதிரவைத்த மகளிர் இருசக்கர வாகனப் பேரணியை மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப. தலைமை ஏற்று நடத்தினார்.

ஆட்சியரின் அதிரடி 'ரைடு':

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், 100% வாக்களிப்போம் என்ற வாசகம் அடங்கிய ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட இருசக்கர வாகனப் பேரணியை ஆட்சியர் கொடியசைத்துத் துவக்கி வைத்ததோடு நில்லாமல், தாமும் ஒரு இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று பொதுமக்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தினார்.

மகளிர் படை:

சுமார் 200க்கும் மேற்பட்ட அரசு மகளிர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் 'பிங்க்' நிறத்தில் ஒருங்கிணைந்து இப்பேரணியில் பங்கேற்றனர். ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கிய இந்தப் பேரணி காந்தி அருங்காட்சியகம், ராஜா முத்தையா மன்றம், ரேஸ் கோர்ஸ் வழியாகச் சென்று மீண்டும் ஆட்சியர் அலுவலகத்தை அடைந்தது.

மெஹந்தியில் தேர்தல் விழிப்புணர்வு:

புதுமையான முயற்சியாக, முதன்முறை வாக்களிக்கும் இளம்பெண்களின் கைகளில் '100% வாக்களிப்போம்' மற்றும் 'என் வாக்கு என் உரிமை' என மெஹந்தி வரைந்து ஆட்சியர் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மதுரை மாவட்டத்திலுள்ள 10 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்குப்பதிவை அதிகரிக்கத் தீவிர நடவடிக்கைகள். கடந்த முறை வாக்குப்பதிவு குறைந்த பகுதிகளில் சிறப்பு கவனம்.

ஏப்ரல் 23 வாக்குப்பதிவு அன்று அனைத்துப் பணியாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுப்பு கட்டாயம்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் வானதி உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## 'செலவு எகிறிவிடும்' என எச்சரிக்கை: தேர்தல் அறிவித்தும் களத்தில் இறங்காத அரசியல் கட்சிகள்!




சேலம்: மார்ச்.21-

வேட்புமனு தாக்கலுக்கே 2 வார காலம் அவகாசம் இருப்பதால், இப்போதே பிரச்சாரத்தை தொடங்கினால் செலவு அதிகமாகிவிடும் என்று சேலம் மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் பிரச்சாரத்தில் களமிறங்காமல் அமைதியாக இருக்கின்றன.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி 15ம் தேதி அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துவிட்டன. இந்நிலையில், தேர்தல் என வந்துவிட்டாலே அனல் பறக்கும் பிரச்சாரங்களில் அரசியல் கட்சிகள் இறங்கிவிடும்.

வேட்பாளர்களின் பெயரை அறிவித்து, அவரது கட்சிக்கு வாக்களிக்க வலியுறுத்தி வாகனங்களில் ஒலிபெருக்கிகளை வைத்து, தெருத்தெருவாக பிரச்சாரம் செய்வது, வேட்பாளர் குறித்த விளம்பரம் செய்வதற்கு சுவர்களை முன்பதிவு செய்து வைப்பது, துண்டுப் பிரசுரங்களை அள்ளி வீசுவது என தேர்தல் பிரச்சாரங்கள் களைகட்டியிருக்கும்.

ஆனால், தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னரும், தமிழகத்தில் அரசியல் கட்சிகளிடையே கூட்டணி தொகுதிப் பங்கீடு முடியாமல் இருப்பதால், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என எந்தக்கட்சியின் கூட்டணியிலும் வேட்பாளர்கள் அறிவிக்கப்படவில்லை.

மேலும், புதிய கட்சிகள் சிலவற்றில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுவிட்டாலும், எவரும் பிரச்சாரத்தில் களமிறங்காமல் அமைதியாக இருக்கின்றனர்.

இது குறித்த அரசியல் கட்சியினர் கூறியதாவது: ஒவ்வொரு தொகுதியிலும் தற்போது எம்எல்ஏவாக இருப்பவர்களுக்கு, மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கிடைக்குமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

மேலும், எம்எல்ஏவாக இருப்பவரின் தொகுதி, கூட்டணி கட்சிக்கு ஒதுக்கப்படவும் வாய்ப்பு உள்ளது. இந்த நிலையில், கட்சிகளிடையே கூட்டணிப் பங்கீடே இன்னமும் முடிவாகவில்லை.

அதன் பின்னர் தான் தொகுதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவற்றில், புது முகங்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்று தகவல்கள் வருகின்றன.

எனவே, சீட் கிடைப்பது உறுதியான பின்னரே, தேர்தல் பிரச்சாரத்துக்கு செலவழிக்க வேண்டும் என்று எல்லோரும் காத்துள்ளனர். மேலும், வேட்புமனு தாக்கல் வரும் 30ம் தேதி தான் தொடங்க உள்ளது.

சுமார் 2 வார கால அவகாசம் இருக்கும் நிலையில், இப்போதே பிரச்சாரத்துக்கு செலவு செய்துவிட்டால், தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டால், கடைசி நேரத்தில் பிரச்சாரம் செய்வதற்கு செலவு செய்ய முடியாத நிலை ஏற்படும். எனவே, பொறுமையாக பிரச்சாரத்தை தொடங்கலாம் என காத்திருக்கிறோம், என்றனர்.

இதனிடையே, 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி கையெழுத்து இயக்கம், பேரணி, இருசக்கர வாகன பேரணி என தேர்தல் ஆணையம் தேர்தலுக்கான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு தொகுதியிலும் பறக்கும் படை சோதனை, நிலைக்குழு கண்காணிப்பு என தேர்தல் ஆணையம் மட்டுமே, இப்போது தேர்தல் களத்தில் பரபரப்பாக இயங்கிக் கொண்டுள்ளது.



# வாக்குப் பதிவு தினத்தன்று பொதுவிடுமுறை தமிழக அரசுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்

சென்னை, மார்ச்.21-
தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறும் ஏப்.23ம் தேதி அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பொது விடுமுறை விட வேண்டும் என்று தமிழக அரசுக்கு, தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் வாக்குப்பதிவு வரும் ஏப்.23ம் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில் 2.90 கோடி பெண், 2.78 கோடி ஆண், 7,656 திருநங்கைகள் என மொத்தம் 5.69 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இந்நிலையில், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு, பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள், அனைத்து கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கு ஏப்.23ம் தேதி சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை விட வேண்டும்.

தொழிலாளர் பணியாற்றும் தொகுதியில் தேர்தல் நடைபெறாவிட்டாலும், தேர்தல் நடைபெறும் தொகுதியில், அந்த தொழிலாளி வாக்காளராக இருந்தால் அவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு அளிக்க வேண்டும்.

தினக்கூலி தொழிலாளராக இருந்தாலும் விடுப்பு அளிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு, இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.

# உத்தராகண்ட் அமைச்சரவை விரிவாக்கம்: புதிதாக 5 எம்எல்ஏக்கள் அமைச்சர்களாக பதவியேற்பு!

டேராடூன், மார்ச்.21-
உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமியின் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக 5 எம்எல்ஏக்கள் அமைச்சர்களாக பதவியேற்றனர்.



கடந்த 2022ல் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக இரண்டாவது முறையாக வெற்றி பெற்றதை அடுத்து, முதல்வராக புஷ்கர் சிங் தாமி மீண்டும் பதவியேற்றார். அவருடன் 8 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

சமூக நலன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த சந்தன் ராம்தாஸ் கடந்த 2023ல் உயிரிழந்ததை அடுத்து, அமைச்சரவையின் பலம் 8 ஆக குறைந்தது. இதன் தொடர்ச்சியாக, நிதி அமைச்சராக இருந்த பிரேம் சந்த் அகர்வால் கடந்த ஆண்டு தனது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து, அமைச்சரவையின் பலம் 7 ஆக சரிந்தது. அரசியலமைப்பு விதிகளின்படி உத்தராகண்ட் அமைச்சரவையில் அதிகபட்சமாக 12 பேர் வரை இருக்கலாம்.

உத்தராகண்ட் சட்டப்பேரவைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள நிலையில், முதல்வர் புஷ்கர் சிங் தாமி தனது அமைச்சரவையை முழு அளவில் இன்று விரிவாக்கம் செய்துள்ளார். கஜன் தாஸ், பரத் சிங் சவுத்ரி, மதன் கவுஷிக், பிரதீப் பத்ரா, ராம் சிங் கைடா ஆகிய 5 எம்எல்ஏக்கள் டேராடூனில் உள்ள மக்கள் பவனில் இன்று அமைச்சர்களாக பதவியேற்றனர்.

ஆளுநர் குர்மித் சிங், அவர்களுக்கு பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். அமைச்சர்களாக பதவியேற்ற அனைவருக்கும் ஆளுநர் குர்மித் சிங்கும், முதல்வர் புஷ்கர் சிங் தாமியும் வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# "ஈரான் சிதைக்கப்படுகிறது; போர் விரைவில் முடிவுக்கு வரும்" நெதன்யாகு உறுதி

டெல் அவிவ், மார்ச்.21-
"ஈரானால் இனி யுரேனியத்தை செறிவூட்டவோ அல்லது பாலிஸ்டிக் ஏவுகணைகளை தயாரிக்கவோ முடியாது. போரில் நாம் வெற்றி பெறுகிறோம், ஈரான் சிதைக்கப்படுகிறது" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.



இது குறித்து ஊடகங்களிடம் பேசிய நெதன்யாகு, "முதலில், நான் உயிருடன் இருக்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன். பாலிஸ்டிக் ஏவுகணைகளை தயாரிப்பதற்கான பாகங்களையும், அணு ஆயுதங்களை தயாரிக்க முயற்சிக்கும் அவர்களின் தொழிற்சாலைகளையும்தான் நாம் இப்போது அழித்துக் கொண்டிருக்கிறோம். ஈரானின் ஏவுகணை மற்றும் ட்ரோன் ஆயுதக் கிடங்கு மிகப் பெரிய அளவில் சிதைக்கப்பட்டு அழிக்கப்படும்.

இஸ்ரேல் தான் அமெரிக்காவை இந்த போருக்குள் இழுத்துவிட்டது என்பது உண்மையில்லை. அதிபர் டொனால்டு ட்ரம்புக்கு என்ன செய்ய வேண்டும் என்று யாராவது சொல்ல முடியும் என உண்மையிலேயே நீங்கள் நினைக்கிறார்களா?. அமெரிக்காவுக்கு எது நல்லது என்று அவர் நினைக்கிறாரோ, அதன் அடிப்படையிலேயே எப்போதும் அவர் தனது முடிவுகளை எடுக்கிறார்.

அதிபர் ட்ரம்ப்புடன் நெருங்கிய ஒருங்கிணைப்பிலும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு இடையேயான நெருங்கிய ஒருங்கிணைப்பிலும், எங்கள் ராணுவங்கள், உளவுத்துறை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பின் மூலம், நாங்கள் மின்னல் வேகத்தில் இலக்குகளை அடைந்து வருகிறோம்.

இந்தப் போரில் அமெரிக்க இஸ்ரேல் கூட்டாண்மை மிகவும் முக்கியமானது. நாங்கள் முழு மத்திய கிழக்கையும் பாதுகாக்கிறோம். மேலும், முழு உலகத்தையும் பாதுகாக்கிறோம் என்று நான் துணிந்து கூறுவேன். ஈரான் விஷயத்தில் நானும் ட்ரம்ப்பும் ஒரே நிலைப்பாட்டில் இருக்கிறோம் உலகம் ட்ரம்ப்புக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

ட்ரம்ப்பின் கோரிக்கையைத் தொடர்ந்து, ஈரானின் முக்கிய எரிவாயு வயல்கள் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் நிறுத்தி வைக்கும். முதல் உண்மை, தெற்கு பார்ஸ் எரிவாயு வளாகத்துக்கு எதிராக இஸ்ரேல் தனியாகவே செயல்பட்டது. இரண்டாவது உண்மை, எதிர்காலத் தாக்குதல்களைத் தள்ளிப்போடுமாறு அதிபர் ட்ரம்ப் எங்களிடம் கேட்டுக்கொண்டார், நாங்கள் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஈரானின் ராணுவ உள்கட்டமைப்பு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. போரில் நாம் வெற்றி பெறுகிறோம், ஈரான் சிதைக்கப்படுகிறது. தற்போது ஈரானை யார் நடத்துகிறார்கள் என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஈரான் உயர் அதிகாரிகளிடையே மிகுந்த பதற்றம் நிலவுகிறது. போர் நாம் எதிர்பார்ப்பதை விட விரைவாக முடிவுக்கு வரும்." என்று அவர் கூறினார்.

# மேற்காசிய பதற்றம் எதிரொலி வரலாறு காணாத ரூபாய் சரிவு டாலருக்கு நகரும் முதலீட்டாளர்கள்

மும்பை, மார்ச்.21-
மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றங்கள், கச்சா எண்ணெய் விலை உயர்வு ஆகியவை காரணமாக வரலாறு காணாத அளவாக டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.93.40 ஆக சரிந்தது.



முந்தைய வணிகத்தின் முடிவில் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.92.87 ஆக இருந்த நிலையில் அது ரூ.93.40 ஆக உயர்ந்து வணிகமாகி வருகிறது. இது முன் எப்போதும் இல்லாத சரிவாகும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது கடந்த பிப். 28ம் தேதி தாக்குதலை தொடங்கியதை அடுத்து, இவ்விரு நாடுகளுக்கும் எதிராக ஈரான் பதிலடி கொடுத்து வருகிறது. இஸ்ரேலின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் மீதான தாக்குதல் உட்பட அந்நாட்டுக்கு எதிராக தொடர் தாக்குதல்களை நடத்தி வரும் ஈரான், அமெரிக்காவுக்கு ஆதரவாக செயல்படும் வளைகுடா நாடுகள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

அதோடு, வளைகுடா நாடுகளின் முக்கிய கடல் வழித்தடமான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியுள்ளது. இதனால், உள்ளே உள்ள கப்பல்கள் வெளியே செல்ல முடியாமலும், வெளியே உள்ள கப்பல்கள் உள்ளே செல்ல முடியாமலும் உள்ளன. இது கச்சா எண்ணெய் தட்டுப்பாடு பரவலாக்கத்துக்கு வழி வகுத்துள்ளது.

இதன் காரணமாக கச்சா எண்ணெய் விலை 94.5 டாலராக உள்ளது. உயர்ந்த தரம் கொண்ட பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 107.65 டாலராக உள்ளது. டாலர் மூலமாகவே எண்ணெய் வர்த்தகம் நடைபெறுவதால் டாலருக்கான மதிப்பும் உயர்ந்து வருகிறது.

டாலர் மதிப்பு உயர்வதால், இந்திய பங்குச் சந்தையில் முதலீடுகளை செய்திருந்த முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டை விற்றுவிட்டு டாலரை நோக்கி நகருகிறார்கள். இதனால், இந்திய பங்குச் சந்தை கடும் சரிவைச் சந்தித்து வருகிறது. டாலரின் மதிப்பு உயர்வதால் ரூபாயின் மதிப்பும் சரிந்து வருகிறது.

வட்டி வகிதங்களைக் குறைப்பதற்கான வாய்ப்பு ஏறக்குறைய இல்லை என்பதாக அமெரிக்க ஃபெடரல் ரிசர்வ் எடுத்துள்ள நிலைப்பாடு காரணமாக, டாலர் வலுவாகவே இருந்து வருகிறது. இது முதலீடுகளை ஈர்த்து வருகிறது.

இந்தியாவில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்காகவும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை கடுமையாக உயர்வதைத் தடுக்கும் நோக்கிலும் ரஷ்யா உட்பட வேறு பல நாடுகளிடம் இருந்து இந்தியா அதிக அளவில் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வருகிறது. இதனால், இந்தியா அதிக அளவில் டாலரை வாங்குகிறது. புவிசார் அரசியலில் ஏற்பட்டிருக்கும் நிலையற்றத் தன்மை காரணமாக இந்திய ரூபாயின் மதிப்பு தொடர் சரிவைச் சந்தித்து வருகிறது




# சிங்காரப் புதுச்சேரியின் தலைவிதியை எழுதும் சின்னஞ் சிறு விரல்கள் : விழிப்புணர்வை கிளப்பிய ஆட்சியர்

புதுச்சேரி, மார்ச் 21-
"வாக்களிப்பது நம் உரிமை மட்டுமல்ல, அது நம் கடமை!" புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு லாஸ்பேட்டை அரசு மகளிர் பொறியியல் கல்லூரியில் மாணவிகளிடையே தேர்தல் விழிப்புணர்வை மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், இ.ஆ.ப. இன்று விதைத்தார்.

ஆட்சியரின் ஆலோசனைகள்: நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மாவட்ட தேர்தல் அதிகாரி, 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி உரையாற்றினார். குறிப்பாக,

85 வயது கடந்த முதியோர்களுக்கான வீட்டிலிருந்தே வாக்கு பிரத்யேக வசதிகள் குறித்து விளக்கினார். புகார் அளிக்க 1950: தேர்தல் விதிமீறல்கள் தெரிந்தால் உடனடியாக அழைக்க வேண்டிய கட்டணமில்லா எண்ணை நினைவூட்டினார். மீரிசீசி செயலி: வேட்பாளர்களின் பின்னணியைத் தெரிந்துகொள்ள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துமாறு மாணவிகளுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக நடைபெற்ற டிஜிட்டல் போஸ்டர் தயாரித்தல், ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு ஆட்சியர் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். கல்லூரி முதல்வர் முனைவர் தணிகாசலம், பேராசிரியர்கள் மற்றும் சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவிகள் இந்த எழுச்சிமிகு விழிப்புணர்வு முகாமில் பங்கேற்றனர்.





■ புனித ரமலான் பண்டிகையைக் கொண்டாடும் இஸ்லாமியச் சகோதர, சகோதரிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர் பெருமக்கள், வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எனது மனமார்ந்த ரம்ஜான் நல்வாழ்த்துக்களை, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் வெ. மகேந்திரகுமார் தனது ரம்ஜான் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# "ஈகை, தியாகம் மற்றும் மனித நேயத்தைப் போற்றும் புனித ரமலான்திருநாள் நல்வாழ்த்துக்கள்

"ஈகை, தியாகம் மற்றும் மனித நேயத்தைப் போற்றும் புனித ரமலான் திருநாளில், உறவுகள் மேம்படட்டும்". அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய இஸ்லாமியச் சகோதர, சகோதரிகள் அனைவருக்கும், ஈகை குணம் மற்றும் தியாகத்தின் மகத்துவத்தைப் பறைசாற்றும் இந்த இனிய ரமலான் திருநாள் நல்வாழ்த்துக்களைதமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.ஜெ. ரவிக்குமார் தனது நெகிழ்ச்சியான வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



# "தேர்தல் பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கு திமுக தொடர் அழுத்தம்" தவெக

சென்னை, மார்ச்.21-
"திமுகவினர் தொடர்ந்து தேர்தல் பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கு சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட அழுத்தம் கொடுப்பதும், சில அதிகாரிகள் அந்த அழுத்தத்திற்கு பணிந்து செயல்படுவதும் தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடக்கும் சூழலை உருவாக்காது," என தவெக கொள்கைப் பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "நேற்றைய தினம் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மல்லசமுத்திரத்தில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகி நடத்தி வரும் புகழ்பெற்ற பள்ளியில் தேர்தல் பறக்கும் படையினர் சட்டத்திற்கு புறம்பான ரெய்டு நடத்தி இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி ஓரிடத்தில் கணக்கில் காட்டப்படாத பணமோ பொருட்களோ பதுக்கி வைத்திருப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டால், பறக்கும் படையினர் வருமான வரித்துறையினருக்கு தகவல் அனுப்பி விட்டு, அந்த இடத்திற்கு விரைந்து சென்று, அந்த இடத்தை பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வரவேண்டும். அந்த இடத்திற்குள் நுழைந்து சோதனை செய்ய பறக்கும் படையினருக்கு அதிகாரம் இல்லை. முறையான வாரண்ட் உடன் வருமான வரித்துறையினர் தலைமையில் தான் சோதனை நடத்தப்பட வேண்டும்.

ஆனால் நேற்றைய தினம் திருச்செங்கோடு மல்லசமுத்திரம் பேரூராட்சியில் இயங்கி வரும் புகழ்பெற்ற கிரிக்ஷி பள்ளியில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருக்கும் வெற்றிவேல் (கிஉஉமீ கிரீக்ஷீவீ ளியீயீவீநீமீக்ஷீ) தலைமையில் தேர்தல் பறக்கும் படையினர் சட்டத்திற்கு புறம்பான சோதனை நடத்தியுள்ளனர். சோதனைக்குப் பிறகு அங்கு எந்த ஒரு பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதிப்படுத்தி சான்றிதழ் அளித்து சென்று இருக்கிறார்கள்.

இவ்வாறு சோதனை நடத்தவோ, சோதனையில் எதுவும் கிடைக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தி கடிதம் கொடுக்கவோ தேர்தல் பறக்கும் படையினருக்கு எந்த ஒரு அதிகாரமும் இல்லை. இதேபோல் 16032026 அன்று திருச்செங்கோடு வரகுராம்பட்டியில், பட்டேல் நகர் பகுதியில் பூட்டி இருந்த வீட்டிற்குள் பரமராஜ் (Asst Agri Officer) தலைமையில் தேர்தல் பறக்கும் படையினர் அத்துமீறி உள் நுழைந்து அங்கு வைக்கப்பட்டிருந்த ரூ. 23,000 மதிப்பிலான பொருட்களை பறிமுதல் செய்துள்ளனர்.

முறையான ஆவணத்துடன், விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுப் பொருள் வழங்க திட்டமிடப்பட்டு, 15032026 அன்று தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால், அன்று நடக்கவிருந்த போட்டிகள் நடத்தப்படாமல் பரிசுப் பொருட்கள் அந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

திமுகவினர் தொடர்ந்து தேர்தல் பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கு இவ்வாறான சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட அழுத்தம் கொடுப்பதும், சில அதிகாரிகள் அந்த அழுத்தத்திற்கு பணிந்து செயல்படுவதும் தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடக்கும் சூழலை உருவாக்காது. மேற்கண்ட அதிகாரிகளை உடனடியாக பணியிடை மாற்றம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

அதேபோல் மூன்று வாரங்களுக்கு முன்பு ஈரோடு பள்ளிபாளையத்தில் இயங்கி வரும் தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகியின் மருத்துவமனையோடு இணைந்து நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் கொடுக்கப்பட்ட மருந்து மாத்திரைகள், ஊட்டச்சத்து டானிக் மற்றும் பூஸ்ட் பாட்டில்களை, ஏதோ தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த பிறகு கொடுக்கப்பட்டது போல சித்தரித்து தொடர்ந்து பொய் செய்திகள் வெளியிட்டு எனது நற்பெயருக்கு களங்கம் விளைவித்து வரும் தனியார் தொலைக்காட்சி மற்றும் ஆளுங்கட்சிக்கு சாதகமாக செயல்பட்டு வரும் சமூக ஊடக செயல்பாட்டாளர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னை மூதாட்டிகளிடம் நூதன முறையில் தொடர்ச்சியாக நகைகளை திருடிய நபர் கைது



சென்னை, மார்ச்.21-
மூதாட்டிகளிடம் தொடர்ச்சியாக நூதன முறையில் நகை திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் கைது செய்யப்பட்டார். சென்னை சூளை, ஆண்டியப்பன் நாயக்கன் தெருவைச் சேர்ந்தவர் மூதாட்டி காளியம்மாள் (76).

கடந்த 17ம் தேதி காலை சூளை, வி.வி.கோவில் அருகே உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மாத்திரைகள் வாங்க சென்று கொண்டிருந்தார்.

அப்போது, அங்கு வந்த 50 வயதுடைய ஆண் ஒருவர், காளியம்மாவிடம் நலம் விசாரித்து, இது ரமலான் மாதம் என்பதால் ஏழை மக்களுக்கு தொழில் அதிபர் ஒருவர் நகை மற்றும் பணம் கொடுக்கிறார் என நம்பிக்கையுடன் பேச்சு கொடுத்தார்.இதை உண்மை என நம்பிய மூதாட்டி, தன்னை அங்கு அழைத்துச் செல்லும்படி கூறினார். இதையடுத்து, அந்த நபர் சற்று தொலைவுக்கு அழைத்துச் சென்று, ஒரு பூட்டிய கடையின் அருகே அமர வைத்து, ‘ஏழைகளுக்கு மட்டுமே தொழில் அதிபர் நகை, பணம் கொடுக்கிறார்.

எனவே, நீங்கள் இப்படி நகை அணிந்து வந்தால் அந்த உதவி கிடைக்காது. எனவே, உங்களது நகைகளை கழட்டி கொடுங்கள், நான் வைத்துக் கொள்கிறேன். நலத்திட்ட உதவி கிடைத்த உடன் உங்களது நகைகளை திரும்ப கொடுத்து விடுகிறேன் என தெரிவித்துள்ளார்.

இதை உண்மை என நம்பிய மூதாட்டி காளியம்மாள், தனது கம்மல் மற்றும் மோதிரத்தை கழற்றி கொடுத்தார். அதை பெற்றுக் கொண்ட அந்த நபர், இங்கேயே சிறிது நேரம் இருங்கள்.அங்கு கூட்டம் எவ்வளவு உள்ளது என பார்த்து விட்டு வருகிறேன் என சென்றவர் மீண்டும் திரும்பி வரவில்லை. நீண்ட நேரமாகியும் அந்த நபர் வராததால், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த காளியம்மாள் இது தொடர்பாக வேப்பேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.இதில், நூதன முறையில் மூதாட்டியிடம் நகைகளை திருடியது சென்னை டி.பி சத்திரத்தைச் சேர்ந்த திருமலை (50) என்பது தெரிந்தது. தலைமறைவாக இருந்த அவரை போலீஸார் கைது செய்தனர்.அவரிடமிருந்து 9 கிராம் எடை கொண்ட தங்க கம்மல் மீட்கப்பட்டது. விசாரணையில், திருமலை கடந்த 16ம் தேதி இதே போல திருவிக நகர் பகுதியில் ஒரு மூதாட்டியை ஏமாற்றி தங்க நகை திருடிச் சென்றதும், இதே பாணியில் அவர் பல மூதாட்டிகளிடம் கைவரிசை காட்டி இருந்ததும் தெரிய வந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

# “நோ ரீபோலிங்!” திண்டுக்கல்லில் அலுவலர்களை அலர்ட் செய்த மாவட்ட திண்டுக்கல் ஆட்சியர்



சின்னாளபட்டி, மார்ச் 21-
"வாக்குச்சாவடியில் உங்கள் தவறு நடந்தால் அது ஒட்டுமொத்த தமிழகத்திற்கும் தெரிந்துவிடும், எச்சரிக்கை!" திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் செ. சரவணன், இ.ஆ.ப. மண்டல அலுவலர்களுக்கு விடுத்த இந்த அதிரடி எச்சரிக்கை தேர்தல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 7 சட்டமன்றத் தொகுதிகளின் (ஆத்தூர், திண்டுக்கல், வேடசந்தூர், பழனி, ஒட்டன்சத்திரம், நத்தம், நிலக்கோட்டை) மண்டல மற்றும் உதவி மண்டல அலுவலர்களுக்கான தீவிர பயிற்சி வகுப்பு நடைபெற்றது. 450க்கும் மேற்பட்ட அலுவலர்கள் இதில் பங்கேற்றனர்.

பயிற்சிக்குத் தலைமை தாங்கிய மாவட்ட தேர்தல் அலுவலர் சரவணன் பேசியதாவது:

மறுவாக்குப்பதிவு தவிர்க்கப்பட வேண்டும்: எந்தவொரு காரணத்திற்காகவும் வாக்குச்சாவடியில் மறுவாக்குப்பதிவு நடைபெறக்கூடாது. அது அந்த மையத்தின் விதிமுறை மீறலை மாநிலம் முழுவதும் அம்பலப்படுத்திவிடும். வாக்காளர் பட்டியல், மை, மின்னணு இயந்திரம், மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் என 60க்கும் மேற்பட்ட பொருட்களை முன்கூட்டியே சரிபார்த்து உறுதி செய்ய வேண்டும். வாக்குப்பதிவை எக்காரணம் கொண்டும் தாமதப்படுத்தக் கூடாது.

*நேரடி செயல்முறை விளக்கம்:* இதனைத் தொடர்ந்து, 7 தொகுதிகளுக்கும் தனித்தனி பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வி.வி.பேட் (கூஷிகூஷிறிகிஜி) இயந்திரங்களைப் கையாள்வது குறித்து அதிகாரிகளுக்கு நேரடிப் பயிற்சி அளிக்கப்பட்டது. மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, பயிற்சி ஆசிரியர் மருத்துவர் வினோதினி மற்றும் தேர்தல் நடத்தும் அலு வலர்க ள் இதில் பங்கேற்றனர்.

# அயர்லாந்தில் சிக்கிய 220 ஏர் இந்தியா பயணிகள் மீட்பு: ரூ.20,000 கருணைத் தொகை அறிவிப்பு




புதுடெல்லி, மார்ச்.21-
தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அயர்லாந்தின் ஷானன் நகரில் தவித்துக் கொண்டிருந்த ஏர் இந்தியாவின் சிறப்பு விமானம் வியாழக்கிழமை அதிகாலை தலைநகர் டெல்லியை வந்தடைந்தது.

கடந்த திங்கள்கிழமை, நியூயார்க்கிலிருந்து டெல்லி நோக்கி வந்து கொண்டிருந்த ஏர் இந்தியாவின் ‘ஏ350’ ரக விமானம் (AI102), திடீர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அயர்லாந்தின் ஷானன் நகருக்குத் திருப்பிவிடப்பட்டது. அங்கு விமானம் தரையிறக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதிலிருந்த 220க்கும் மேற்பட்ட பயணிகளும் ஊழியர்களும் அங்கேயே தவிக்கும் சூழல் ஏற்பட்டது.

இந்நிலையில், பயணிகளை அழைத்து வர சுவிட்சர்லாந்தின் ஜூரிச் நகரிலிருந்து ‘போயிங் 787’ ரக சிறப்பு விமானம் ஷானன் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த விமானம் புதன்கிழமை பிற்பகல் இந்திய பயணிகளை ஏற்றிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு, வியாழக்கிழமை அதிகாலை டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

ரூ.20,000 நிதியுதவி பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு நல்லெண்ண அடிப்படையில் தலா ரூ.20,000 கருணைத் தொகையை ஏர் இந்தியா வழங்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



# பற்றி எரியும் குவைத் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்: தாக்குதலுக்கு பின் ஈரான் கடும் எச்சரிக்கை

குவைத், மார்ச்.21-
குவைத்தின் மினா அல்அஹ்மதி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது ஈரான் இன்று (மார்ச் 20) நடத்திய ட்ரோன் தாக்குதல்களால் பெரும் தீ விபத்து ஏற்பட்டதாக குவைத் அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தாக்குதலைத் தொடர்ந்து, “எங்கள் உள்கட்டமைப்புகள் மீண்டும் தாக்கப்பட்டால், எங்களிடம் எந்தவிதமான கட்டுப்பாடும் இருக்காது.” என்று ஈரான் எச்சரித்துள்ளது

இன்று அதிகாலை மினா அல் அஹ்மதி சுத்திகரிப்பு நிலையம் ட்ரோன் தாக்குதல்களுக்கு உள்ளானதாகவும், அதன் விளைவாக சுத்திகரிப்பு நிலையத்தின் பல அலகுகளில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் குவைத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (ரிறிசி) தெரிவித்தது.

குவைத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் தனது அதிகாரபூர்வ எக்ஸ் தளத்தில், “இன்று அதிகாலை மினா அல் அஹ்மதி சுத்திகரிப்பு நிலையம் ட்ரோன் தாக்குதல்களுக்கு உள்ளானதால், பல பிரிவுகளில் தீ விபத்து ஏற்பட்டதுடன், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்நிறுவனத்தின் சில பகுதிகள் மூடப்பட்டன. இந்த தாக்குதலில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. ஆனால், நிலைமையைக் கட்டுப்படுத்த அவசரகாலக் குழுக்கள் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான போர் மூன்றாவது வாரத்தை எட்டியுள்ள நிலையில், புதன்கிழமை இரவு இஸ்ரேல், ஈரானின் தெற்கு பார்ஸ் எரிவாயு நிலையம் மீது தாக்குதல் நடத்தியது. இதற்குப் பதிலடியாக, கத்தாரின் ராஸ் லஃபான் தொழில்துறை நகரம் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதில், பெரும் சேதம் ஏற்பட்டது. பின்னர் வியாழக்கிழமை, வடக்கு இஸ்ரேலில் உள்ள மிகப்பெரிய ஹைஃபா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் மீது ஈரானின் பாலிஸ்டிக் ஏவுகணைகள் தாக்குதல் நடத்தியது.

இதற்கிடையில், வியாழக்கிழமை, ஈரான் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ் அராக்சி, “எங்கள் உள்கட்டமைப்பு மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு நாங்கள் அளித்த பதிலடி, எங்கள் சக்தியின் ஒரு சிறு பகுதி மட்டுமே. பதற்றத்தைத் தணிக்குமாறு கோரப்பட்ட கோரிக்கைக்கு மதிப்பளிப்பதே கட்டுப்பாட்டிற்கான ஒரே காரணம். எங்கள் உள்கட்டமைப்புகள் மீண்டும் தாக்கப்பட்டால், எங்களிடம் எந்தவிதமான கட்டுப்பாடும் இருக்காது. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால், எங்கள் பொதுமக்கள் வசிக்கும் இடங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் சரிசெய்யப்பட வேண்டும்.” என்று கூறினார்

# சினிமா எடுப்பது ‘ரிஸ்க்’ நிறைந்த தொழில்; தயாரிப்பாளர் மீதான மோசடி வழக்கு ரத்து: உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு




புதுடெல்லி, மார்ச்.21-
திரைப்படத் தொழில் நஷ்டத்தால் கடனைத் திருப்பிச் செலுத்தாதது ஏமாற்று வேலை கிடையாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சினிமா தயாரிப்பாளர் வி.கணேசன் என்பவர், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் தனது புதிய திரைப்படத் தயாரிப்பிற்காக பெரும் தொகையைக் கடனாகப் பெற்றிருந்தார். படம் வெளியான பிறகு எதிர்பார்த்த லாபம் கிடைக்காத காரணத்தால், வாங்கிய கடனை முழுமையாகத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட தரப்பினர், தயாரிப்பாளர் கணேசன் திட்டமிட்டு தங்களை ஏமாற்றி விட்டதாகக் கூறி அவர் மீது மோசடி வழக்கு தொடுத்தனர்.

இந்த வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா மற்றும் மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று அளித்த தீர்ப்பில், ‘திரைப்படத் தயாரிப்பு என்பது அதிக ‘ரிஸ்க்’ நிறைந்த தொழில். ஒரு படம் வெற்றி பெறுமா அல்லது தோல்வியடையுமா என்பதற்கு யாராலும் உத்தரவாதம் அளிக்க முடியாது. ஒரு நபர் தொடக்கத்திலேயே ஏமாற்றும் எண்ணத்துடன் செயல்பட்டால் மட்டுமே, அவற்றை பாலியல் பலாத்காரம் போன்ற மோசடி குற்றப் பிரிவின் கீழ் வரும்.

இங்கு தயாரிப்பாளர் படத்தை எடுத்து வெளியிட்டுள்ளார். எனவே, அவருக்குத் தொடக்கத்திலேயே ஏமாற்றும் எண்ணம் இருந்ததாகக் கருத முடியாது. தொழில் ரீதியான ஒப்பந்தங்களில் ஏற்படும் பண இழப்பு அல்லது வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போவது சிவில் பிரச்னை ஆகும். தொழில் நஷ்டத்தால் கடனைத் திருப்பித் தராதவரை குற்றவாளியாகக் கருத முடியாது’ என்று கூறி தயாரிப்பாளர் மீதான மோசடி வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டனர்

# தமிழகத்தில் மார்ச் 26 வரை சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு



சென்னை, மார்ச்.21-
தமிழகத்தில் ஓரிரு இடங்களில் 26ம் தேதி வரை மழை நீடிக்க வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் வட கர்நாடகாவின் உள்பகுதி வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளையும், நாளை மறுநாளும் (மார்ச் 21, 22) மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதைத் தொடர்ந்து, 26ம் தேதி வரை லேசான மழை நீடிக்கும். இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். வெப்பநிலை 77 டிகிரி முதல் 93 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சேலம் மாவட்டம் எடப்பாடியில் 9 செ.மீ., சங்கரி துர்க்கம், கடலூர் மாவட்டம் வேப்பூர், நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் 8 செ.மீ., சேலம் மாவட்டம் மேட்டூரில் 7 செ.மீ., சந்தியூர், கரூர் மாவட்டம் குளித்தலை, கடலூர் மாவட்டம் லக்கூரில் 6 செ.மீ., தென்காசி மாவட்டம் குண்டாறு அணை, அரியலூர் மாவட்டம் செந்துறை, கடலூர் மாவட்டம் கீழச்செருவை, கள்ளக்குறிச்சியில் 5 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

# “திமுக அரசின் நிர்வாக குளறுபடிகளால் பேருந்துகள் முற்றிலும் பழுது” நயினார் நாகேந்திரன் காட்டம்



சென்னை, மார்ச்.21-
“மழைக்கும், காற்றுக்கும் தாங்காத தகர டப்பாக்களை எல்லாம் ‘விடியல் பேருந்து’ என்ற பெயரில் ஒட்டுப் போட்டு ஓட்டிக் கொண்டிருக்கும் திமுக அரசின் அலட்சியத்துக்கு ஏழை எளிய மக்கள் பலியாக வேண்டுமா?” என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், “சேலம் அருகே அரியானூர் என்ற இடத்தில் கட்டுப்பாட்டை இழந்த அரசுப் பேருந்து, தடுப்பைத் தாண்டி சரக்கு வாகனத்தில் மோதிய விபத்தில் 8 பேர் உயிரிழந்ததுடன் மேலும் சிலர் படுகாயமடைந்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தி மிகுந்த வருத்தமளிக்கிறது.

உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களைக் கனத்த இதயத்துடன் தெரிவித்துக் கொள்வதோடு, காயமடைந்தவர்கள் முழு மன மற்றும் உடல் நலத்துடன் விரைவில் குணமடைய இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன்.

ஆளும் திமுக அரசின் நிர்வாகக் குளறுபடிகளால் தமிழகப் போக்குவரத்துத் துறையும் அதன் கீழ் இயங்கும் அரசுப் பேருந்துகளும் முற்றிலுமாகப் பழுதாகிக் கிடப்பதை நாம் பலமுறை ஆதாரங்களுடன் எடுத்துக் கூறியுள்ளோம். மழைக்கும், காற்றுக்கும், வெயிலுக்கும், சிறு மேடு பள்ளங்களுக்கும் தாங்காத தகர டப்பாக்களை எல்லாம் “விடியல் பேருந்து” என்ற பெயரில் ஒட்டுப் போட்டு ஓட்டிக் கொண்டிருக்கும் திமுக அரசின் அலட்சியத்திற்கு ஏழை எளிய மக்கள் பலியாக வேண்டுமா?

தங்கள் ஊழல் கஜானாவை எப்படியாவது நிரப்பிட வேண்டும் என்ற ஒரே நோக்கில் அப்பாவிப் பொது மக்களின் உயிர்களை அடமானம் வைக்கத் துடிக்கும் திமுக போன்ற ஒரு தீயசக்தியைத் தமிழக மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள், இனி அரியணையில் ஏறவும் அனுமதிக்க மாட்டார்கள்!” என்று அவர் தெரிவித்துள்ளார்

# பிரீமியம் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.2 அதிகரிப்பு!




புதுடெல்லி, மார்ச்.21-
பிரீமியம் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தி ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதலை தொடங்கியதை அடுத்து, இரு தரப்புக்கும் இடையேயான போர் 21 வது நாளாக நீடித்து வருகிறது. ஈரானின் முக்கிய எண்ணெய் வயலை இஸ்ரேல் தாக்கியதால், கத்தாரின் மிகப் பெரிய எண்ணெய் வயலை ஈரான் தாக்கியது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கி உள்ளது. இதன் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது. தற்போதும் ஏற்ற இறக்கங்களுடன் கச்சா எண்ணெய் விற்பனையாகி வருகிறது.

இந்நிலையில், பிரீமியம் பெட்ரோலின் விலையை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தி ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் அறிவித்துள்ளது. அதேநேரத்தில், விலை உயர்வுக்கான காரணத்தை அது தெரிவிக்கவில்லை. எனினும், சாதாரண பெட்ரோலின் விலையில் மாற்றம் எதையும் அது செய்யவில்லை.

இந்தியாவில் கச்சா எண்ணெய்க்கு தட்டுப்பாடு இல்லை என எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. அதேநேரத்தில், அவற்றின் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

பிரீமியம் பெட்ரோல் என்றால் என்ன?

வாகனத்தின் என்ஜினின் செயல் திறன் சிறப்பாக இருப்பதற்காகவும், மேம்பட்ட மைலேஜுக்காகவும் பயன்படுத்தப்படுவது பிரீமியம் பெட்ரோல் எனப்படுகிறது.

குறிப்பாக, சொகுசு வாகனங்கள், ஸ்போர்ட்ஸ் வாகனங்கள், உயர் செயல்திறன் கொண்ட கார்கள் ஆகியவற்றில் இத்தகைய எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது. ஆக்டேன் எரிபொருள் அல்லது பவர் பெட்ரோல் என்றும் இது அழைக்கப்படுகிறது. ஹிந்துஸ்தான் பெட்ரோலியத்தின் இந்த விலை உயர்வு, வசதி படைத்த வாடிக்கையாளர்களையே பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘‘கச்சா எண்ணெய் விநியோகத்தில் எந்த இடையூறும் இல்லை. கூடுதல் சரக்குகள் ஏற்கெனவே வந்து கொண்டிருக்கின்றன. வரும் நாட்களில் இந்தியாவின் விநியோக நிலை மேலும் வலுப்படும். வதந்திகளை நம்பாதீர்கள். அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை நம்புங்கள்’’ என தெரிவித்திருந்தது.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதற்கு வழிவகுக்கும் முயற்சிகளில் முன்னணி ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானும் இணைய முன்வந்ததால், பேரலுக்கு 110 டாலராக உயர்ந்த கச்சா எண்ணெய் விலை 105 டாலராக குறைந்தது கவனிக்கத்தக்கது.



# தேர்தல் நேரத்தில் விவசாயிகளின் ‘ஆலையடி’ ஆராதனை: வாக்குறுதி என்னாச்சு ஸ்டாலின் அவர்களே

அலங்காநல்லூர், மார்ச். 21-

"வாக்கு வாங்கும்போது ஒரு பேச்சு.. அரியணை ஏறியபின் ஒரு பேச்சா?" அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையை இயக்க வலியுறுத்தி, வலையபட்டி மஞ்சமலை அய்யனார் கோவிலில் தென்னக கரும்பு விவசாயிகள் சங்கம் நடத்திய சிறப்புப் பூஜை அதிகார வர்க்கத்திற்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

*விவசாயிகளின் குமுறல்:*

கடந்த 2021 தேர்தலின் போது, "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை மீண்டும் இயங்கும்" என வாக்குறுதி அளித்து விவசாயிகளின் வாக்குகளைப் பெற்றார் மு.க. ஸ்டாலின். ஆனால், ஐந்து ஆண்டுகள் முடியப் போகும் நிலையிலும் ஆலை இன்னும் முடங்கிக் கிடப்பது விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் செயலாக உள்ளது என சங்கத் தலைவர் நல்லமணி காந்தி தலைமையில் விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

*முக்கிய கோரிக்கைகள்:*

முடங்கிக் கிடக்கும் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையை உடனடியாக இயக்க வேண்டும்.

கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையை வட்டியுடன் வழங்க வேண்டும்.

தொழிலாளர்களின் பல மாத சம்பள பாக்கியத்தை உடனே செட்டில் செய்ய வேண்டும்.

நிர்வாகிகள் அழகர்சாமி, தங்கராஜ், ராமமூர்த்தி, செல்லமுத்து ஆகியோர் முன்னிலையில் அய்யனாருக்கு பொங்கல் வைத்து, தேங்காய் உடைத்து வழிபாடு நடத்தப்பட்டது. "ஆட்சியில் அமருபவர்கள் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்கவில்லை என்றால், தேர்தல் முடிவு வேறாக இருக்கும்" என விவசாயிகள் ஆவேசத்துடன் தெரிவித்தனர்.

# மறைந்த தலைவர்களின் சிலைகளை மூடி வைக்கத் தேவையில்லை? அதிகாரிகளின் ‘தலைக்கனம்‘ அகரக்கட்டு லூர்து



சென்னை, மார்ச். 21-

தமிழக சட்டமன்றத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், தாம்பரம் பூண்டி பஜாரில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவச் சிலை மூடி வைக்கப்பட்டுள்ள விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார், தலைமைத் தேர்தல் அதிகாரி ஜோதி நிர்மலா சாமிக்கு அவசரக் கடிதம் மற்றும் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.

"தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி மறைந்த தலைவர்களின் சிலைகளை மூடி வைக்கத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்ட பிறகும், காமராஜர் சிலையை மட்டும் மூடியிருப்பது ஏன்?" என அகரக்கட்டு லூர்து நாடார் கேள்வி எழுப்பியுள்ளார். சென்னையில் பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, கலைஞர் ஆகியோரின் சிலைகள் திறந்துள்ள நிலையில், பெருந்தலைவர் சிலையை மட்டும் மூடியிருப்பது அவரை இழிவுபடுத்தும் செயல் என அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

*அதிகாரிகள் மீது அதிரடி புகார்:*

திட்டமிட்டே காழ்ப்புணர்ச்சியுடன் இந்தச் செயலைச் செய்த அதிகாரிகள் அல்லது தனிநபர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், உடனடியாக அச்சிலையைத் திறந்து வைக்க ஆவண செய்ய வேண்டும் என்றும் அந்தப் புகார் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# அமெரிக்க ராணுவ தளத்தில் பறந்த மர்ம ட்ரோன்களால் பதற்றம் பாதுகாப்பு, வெளியுறவு அமைச்சர்களை இடமாற்றம் செய்ய முடிவு



வாஷிங்டன், மார்ச்.21-

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் உள்ள ராணுவ தளத்தின் மீது மர்ம ட்ரோன்கள் பறந்ததால் பதற்றம் எழுந்திருக்கிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கு வசிக்கும் பாதுகாப்பு, வெளியுறவு அமைச்சர்களை இடமாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் போர்ட் லெஸ்லி ஜே. மெக்நேயர் என்ற ராணுவ தளம் அமைந்துள்ளது. இந்த மையம் அமெரிக்காவின் முக்கிய ஆயுதக் கிடங்குகளில் ஒன்றாகவும் விளங்குகிறது. அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்செத், வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ ஆகியோர் இந்த வளாகத்தில் வசிக்கின்றனர்.

இந்த சூழலில் கடந்த 10 நாட்களாக மெக்நேயர் ராணுவ தளத்தின் மேலாக மர்ம ட்ரோன்கள் பறக்கின்றன. அமெரிக்க ராணுவத்தின் வான் பாதுகாப்பு கவசம், கண்காணிப்பை மீறி மர்ம ட்ரோன்கள் ராணுவ வளாகத்துக்குள் நுழைந்திருப்பது பதற்றத்தை அதிகரித்து உள்ளது. இதுதொடர்பாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தலைமையில் வெள்ளை மாளிகையில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு உள்ளது.

இதில் பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத், வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோவை மெக்நேயர் ராணுவ தள வளாகத்தில் இருந்து இடமாற்றம் செய்ய முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அமெரிக்காவின் புளோரிடா மாகாணம், டம்பாவில் மேக்டில் விமானப் படைத் தளம் செயல்படுகிறது. இந்த விமானப் படைத் தளத்துக்கு அருகே மர்ம ட்ரோன்கள் அடிக்கடி பறப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

எனவே அமெரிக்காவில் உள்ள அனைத்து ராணுவ தளங்களும் உஷார் நிலையில் இருக்குமாறு உத்தரவிடப்பட்டு உள்ளது. இதுதொடர்பாக சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் கூறியதாவது: ஈரானில் இருந்து சுமார் 11,500 கி.மீ. தொலைவில் அமெரிக்கா அமைந்துள்ளது.

ஈரானின் ட்ரோன்கள் 2,500 கி.மீ. தொலைவு வரை மட்டுமே பறக்கும் திறன் கொண்டது. எனவே அமெரிக்க கடல் பகுதிகளுக்கு மர்ம கப்பல்களை அனுப்பி, அந்த கப்பல்களில் இருந்து ட்ரோன்கள் மூலம் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த ஈரான் ராணுவம் திட்டமிட்டு இருக்கலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



■ தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட புளியங்குடி பேருந்து நிலையத்தில் , தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகம், மகளிர் திட்டம் மற்றும் நகராட்சி நிர்வாகம் சார்பில் 100% வாக்குப்பதிவு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்.இ.ஆ.ப, தலைமையில் நடைபெற்றது.தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட புளியங்குடி பேருந்து நிலையத்தில் , தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகம், மகளிர் திட்டம் மற்றும் நகராட்சி நிர்வாகம் சார்பில் 100% வாக்குப்பதிவு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்.இ.ஆ.ப, தலைமையில் நடைபெற்றது.

# நள்ளிரவு வேட்டை: 2 டிரான்ஸ்பார்மர்களை அபேஸ் செய்த கும்பல்! போலீஸ் ‘வாட்ச்



இட்டமொழி, மார்ச். 21-

வழக்கமாக வயக்காட்டில் மின்சாரக் கம்பிகளைத் திருடும் திருடர்கள், இப்போது ஒரு படி மேலே போய் ராட்சத டிரான்ஸ்பார்மர்களையே திருடிச் சென்ற துணிகரச் சம்பவம் நெல்லை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

*ஸ்கெட்ச் போட்டு தூக்கிய கும்பல்:*

நெல்லை மாவட்டம் இட்டமொழி அருகே உள்ள இலங்கையாடிகுளம் மற்றும் ஒத்தவீடு வேலாயுதபுரம் காட்டுப்பகுதிகளில் விவசாய மின் இணைப்பிற்காக அமைக்கப்பட்டிருந்த இரண்டு மின்மாற்றிகளை (Transformers) மர்ம கும்பல் குறிவைத்து வாகனத்தில் வந்த மர்ம கும்பல், இணைப்பைத் துண்டித்துவிட்டு, கயிறு கட்டி டிரான்ஸ்பார்மர்களைக் கீழே இறக்கி வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர். மறுநாள் காலை தோட்டங்களுக்குச் சென்ற விவசாயிகள், மின்சாரம் இல்லாததைக் கண்டு மின்வாரியத்திற்குத் தகவல் கொடுத்தனர். அதிகாரிகள் வந்து பார்த்தபோதுதான், டிரான்ஸ்பார்மர்களே காணாமல் போன அதிர்ச்சித் தகவல் அம்பலமானது. திருச்செந்தூர் வள்ளியூர் மெயின் ரோடு அருகிலேயே இந்தத் துணிகரத் திருட்டு அரங்கேறியுள்ளது.

இது குறித்து இட்டமொழி இளநிலை மின் பொறியாளர் சங்கீதா அளித்த புகாரின் பேரில், திசையன்விளை இன்ஸ்பெக்டர் எழில் சுரேஷ் சிங் வழக்குப்பதிவு செய்து, அந்தத் 'டிரான்ஸ்பார்மர்' கும்பலைத் தீவிரமாகத் தேடி வருகிறார்.

# மதநல்லிணக்கமே மாண்பு: இஸ்லாமிய பெருமக்களுக்கு தல்லாகுளம் முருகன் ரம்ஜான் வாழ்த்து



மதுரை, மார்ச். 21-

"சாதி, மத, மொழி பேதங்களைக் கடந்து சகோதரத்துவத்தோடு வாழ்வதே தமிழகத்தின் சிறப்பு" என மதுரை மாநகராட்சி 31வது வார்டு காங்கிரஸ் கவுன்சிலரும், 5ஆம் பகுதி சர்க்கிள் தலைவருமான தல்லாகுளம் முருகன் தனது ரம்ஜான் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

உலகெங்கும் வாழும் இஸ்லாமியர்கள் புனித ரமலான் பண்டிகையைக் கொண்டாடும் இந்த நன்னாளில், அனைவரது இல்லங்களிலும் மகிழ்ச்சியும், அமைதியும் நிலைத்திருக்க வேண்டும் என அவர் வாழ்த்தியுள்ளார். காங்கிரஸ் தொண்டர்கள் எப்போதும் ஒற்றுமையின் அடையாளமாகத் திகழ வேண்டும் என்றும், சமத்துவப் பாதையில் அன்பைப் பரிமாறிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.





■ ஈரோடு சர்வதேச மனித உரிமைகள் சமூக நீதி சபை, உலக மகளிர் பேரவை யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசியத் தலைவர் ஆர் செல்வ கணேஷன் ஆணைக்கிணங்க மாநில தலைவர் ஒப்புதலுடன் ஈரோடு மாவட்ட செயலாளர் டாக்டர் வி தங்கவேல் அவர்களால் ஈரோடு வட்டம் மேட்டு நாசுவம் பாளையம் கிராம நிர்வாக அலுவலர் ஆர் கோமதிக்கு கீசிகீஸி சிங்கப்பெண் விருதுக்கான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.


ஸ்ரீ கோமதி அம்பாள் டிராவல்ஸ்



ஏர் புஷ்பேக் சொகுசு பேருந்து வாடகைக்கு கிடைக்கும்
சங்கரன்கோவில்
ஆறுமுகம் - 98657 64957

கேரளா பர்னிச்சர்




ரயில்வே பீட்டர் ரோடு, சங்கரன்கோவில் 627756
9895544685 / 7092779356

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000
SPECIAL OFFER



ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B, மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004

S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.



Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P. மணிகண்டன் B.Com., 78452 54592
P. பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

SRI GANAPATHY ELECTRICALS
HARDARE & PIPES
#156, Jayakumar Lane, Omalur Road, Five Road, Salem - 636 004
All Types of Electricals & Hardware Pipes Avail Here




98842 99777 91591 58769


SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000